# முதல் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - இரண்டு - ________

நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: ________ | மாணவன்/மாணவி பெயர்: ________ |
| இடம்: ________ | வரிசை எண்: ________ |

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 10 × 1 = 10

1. வீசும் காற்றில் பட்டம் ____________ காட்டிப் பறக்கிறது.

   அ) வித்தை  ஆ) வாலை  இ) அழகு

2. அழகு மூக்கு இருக்குது. அருமையாக பறக்குது. அது என்ன?

   அ) சட்டை  ஆ) கிளி  இ) குயில்

3. மரத்திற்கு மரம் தாவிக் குதிப்பது ____________

   அ) குரங்கு  ஆ) மயில்  இ) அணில்

4. கற்பது கடினம் என்று ____________ சொல்லாதே.

   அ) மீன்களிடம்  ஆ) யானையிடம்  இ) மாணவர்களிடம்

5. வருண் வீட்டில் ____________ இருக்கிறது.

   அ) முயல்  ஆ) பூனைக்குட்டி  இ) நாய்க்குட்டி

6. அமுதனும், தாரணியும் ____________ வரைந்தனர்.

   அ) வீடு  ஆ) மலை  இ) ஆறு

7. பென்சில் என்ற சொல்லின் தமிழ்ச்சொல் ____________

   அ) அழிப்பான்  ஆ) துருவி  இ) கரிக்கோல்

8. ஆத்திசூடி எழுதியவர் ____________

   அ) ஔவையார்  ஆ) கண்ணதாசன்  இ) கவிமணி

9. காலண்டர் என்ற சொல்லின் தமிழ்ச்சொல் ____________

   அ) நாள்காட்டி  ஆ) கையேடு  இ) கரும்பலகை

10. பாரம்பரிய விளையாட்டுகளுள் ஒன்று ____________

    அ) மட்டைப்பந்து  ஆ) கால்பந்து  இ) தாயம்

II. **பொருத்தமான குறியிடுக. சரி ☑ தவறு ☒:** 5 × 1 = 5

11. சுமதி பூங்காவில் பூக்களைப் பறித்தாள். ☐
12. வருணுக்குக் கால்பந்து விளையாடப் பிடிக்கும். ☐
13. தாரணி வீட்டு மரத்தில் ஊஞ்சல் ஆடலாம். ☐
14. பொம்மை போட்ட அழிப்பான் மங்கையினுடையது. ☐
15. தோகை விரித்தாடுவது மயில். ☐

III. **பொருத்துக:** 4 × 1 = 4

| | |
|---|---|
| 16. யானை | தண்ணீரை வீணாக்காதீர் |
| 17. வருணின் அம்மா | கால்கள் நனைக்கலாம் |
| 18. தண்ணீர்குழாய் | எதையும் பொறுமையாகக் கேட்பார் |
| 19. கடலலையில் | காட்டின் இருட்டு |

IV. **விடுபட்ட எழுத்தை எழுதுக:** 4 × 1 = 4

20. தோட்_____ம்
21. மா_____
22. மரக்கி_____
23. க_____வு

V. **எதிர்ச்சொல் எழுதுக:** 4 × 1 = 4

24. கடினம் × _______________
25. மேலே × _______________
26. முன்பக்கம் × _______________
27. பெரிய × _______________

VI. **ஒருமைக்குரிய பன்மைச் சொல்லை எழுதுக:** 4 × 1 = 4

28. ஏணி - _______________
29. மரம் - _______________
30. மீன் - _______________
31. பசு - _______________

VII. **எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 3 × 2 = 6

32. வருணை எவ்வாறெல்லாம் அழைக்கிறார்கள்?

________________________________________

________________________________________

33. அமுதன் என்னென்ன வரைந்தான்?

________________________________________

________________________________________

34. விட்டுச் சென்ற பொருள்கள் உரியவர்களுக்கு எப்போது கிடைத்தன?

_______________________________________________

35. வானம் தூரமென்று யாரிடம் சொல்லக் கூடாது?

_______________________________________________

_______________________________________________

36. உணவைக் கீழே சிந்தக் கூடாது ஏன்?

_______________________________________________

_______________________________________________

**VIII. உம் பாடப்பகுதியில் உள்ள ஏதேனும் இரண்டு ஆத்திசூடியை எழுதுக:** 2 × 2 = 4

37. _______________________________________________

38. _______________________________________________

**IX. எந்த இடம்? என்ன பொருள் எழுதுக:** 2 × 2 = 4

39.

| | | |
|---|---|---|
| | | |
| | மரம் | கூடு |

40.

| | | |
|---|---|---|
| | கடல் | |
| | நண்டு | |

**X. யார் என்ன செய்கிறார்கள்?** 2 × 2 = 4

41.



பெயர்: ________________

செயல்: ________________

42.



பெயர்: ________________

செயல்: ________________

**XI. பொருத்தமான சொல்லை எழுதி நிரப்புக:** 3 × 1 = 3

(அது, அவன், அவள், அவை, அவர்கள்)

43. வளவன் மிதிவண்டி ஓட்டுகிறான். ____________ பள்ளிக்குச் செல்கிறான்.

44. பூனை பால் குடிக்கிறது. ____________ எலியைப் பிடிக்கும்.

45. கோதை இரண்டாம் வகுப்பு படிக்கிறாள். ____________ அழகாக ஓவியம் வரைகிறாள்.

**XII. முதல் எழுத்தை மாற்றிப் பறவையின் பெயரை எழுதுக:** 3 × 1 = 3

46. பாக்கு - ________________

47. சந்தை - ________________

48. பாகம் - ________________

**XIII. இரண்டாம் எழுத்தை நீக்கிப் புதிய சொல்லை உருவாக்குக:** 3 × 1 = 3

49. ஆண்டு - ________________

50. பாடல் - ________________

51. மழலை - ________________

**XIV. சொல்லுக்குள் மறைந்திருக்கும் சொல்லைக் கண்டுபிடித்து எழுதுக:** 2 × 1 = 2

52. பலாமரம் - ________________

53. விண்மீன் - ________________